பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 06 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கனடாவில் ஜி.7 உச்சிமாநாட்டின் இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. டெஹ்ரானில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

4. பீகார் மாநிலம் **Buxar,** மேற்கு சம்பரான் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்னல் தாக்கி 14 பேர் உயிரிழந்தனர்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான **Cava** வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<

கனடாவில் ஜி.7 உச்சிமாநாட்டின் இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கனடாவின் **Calgary** நகரை சென்றடைந்த பின்னர் பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இம்மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தெற்கு நாடுகளுக்கான முன்னுரிமை குறித்து தமது பேச்சுக்களின் போது வலியுறுத்த உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கனடா சென்ற பிரதமருக்கு இந்தியா வம்சவாளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

>>>>>>><<<<<<<

இஸ்ரேல் - ஈரான் தாக்குதல் காரணமாக, டெஹ்ரானில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

டெஹ்ரானை விட்டு வெளியேறுவோர் ஈரானில் உள்ள இந்திய தூதரகங்களுடன் தொடர்பில் இருக்குமாறும் வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இவர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக 1 8 0 0 1 1 8 7 9 7 என்ற கட்டணமில்லா தொலைபேசி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வாட்ஸ்ஆப் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை ஒன்றும் வெளியுறவு அமைச்சகத்தில் திறக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, டெஹ்ரானில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயின்று வரும் இந்திய மாணவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கான ஏற்பாடுகளை இந்திய தூதரகம் மேற்கொண்டு வருவதாகவும் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

ஈரானை விட்டு வெளியேறும் இந்தியர்கள் அர்மேனியா வழியாக நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப்பும் டெஹ்ரானில் வசிக்கும் அமெரிக்கர்கள் அந்நகரை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் பிரச்சினை காரணமாக, தமது கனடா பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்புவதாகவும் திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இளையோருக்கான மருத்துவக் கல்வி வாய்ப்பபை அதிகரிக்கும் வகையில் நாடுமுழுவதும் புதிய மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மத்திய அரசின் இந்த நடவடிக்கை மூலம், மக்களுக்கு சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடுமுழுவதும் புதிதாக 75 ஆயிரம் மருத்துவக் கல்வி இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

நாகாலாந்து மாநிலத்தின் **Wokha** மாவட்டத்தில் வாழை சாகுபடியிலிருந்து வருவாய் ஈட்டுதல் குறித்த ஐந்தாண்டு செயல்திட்டத்தை மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.

ஒரு மாவட்டம் – ஒரு தயாரிப்பு என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜிதேந்திர சிங், சமுதாய மேம்பாட்டு திட்டங்களில் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தன்னார்வ அமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதுடன், போதை பழக்கத்திற்கு எதிராக மிஸோரம் மாநிலத்தில் கடைபிடிக்கப்படும் முறையை **Wokha** மாவட்டத்திலும் கடைபிடிக்குமாறு அவர் வலியுறுத்தினார்.

மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்கும் இடையேயான மோதலை கட்டுப்படுத்த நீண்டகால தீர்வு காண்பதற்கான கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீர் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்திய திரு. ஜிதேந்திர சிங், நாட்டின் வளர்ச்சிக்கு பழங்குடியினரின் முன்னேற்றம் அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருவதையும் சுட்டிக்காட்டினார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, கடந்த 11 ஆண்டுகளில் மகளிரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

தூய்மை இந்தியா இயக்கம், பெண்களின் கண்ணியம் மற்றும் ஆரோக்கியத்தை உறுதி செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று, ஆயுஷ்மான் பாரத், உஜ்வாலா போன்ற திட்டங்களும் கிராமப்புற பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தியிருப்பதாகவும் திருமதி. சாவித்ரி தாக்கூர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்கொள்வதற்கான உலக விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

‘நிலத்தை மீட்டெடுப்போம் - வாய்ப்புகளை பயன்படுத்துவோம்’ என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

வறட்சியை போக்கி, மண்வளத்தை பாதுகாப்பதன் மூலம், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உணவு மற்றும் தண்ணீர் பாதுகாப்பை மேம்படுத்தி, பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று பாலைவனமாதலை தடுப்பதற்கான ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

கர்நாடகா, கோவா மற்றும் கொங்கன் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில பகுதிகளில் கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 21 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் சிருங்கேரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக துங்கபத்ரா மற்றும் ஹேமாவதி ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் **Buxar,** மேற்கு சம்பரான் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வரும் நிலையில் மின்னல் தாக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்டிராவில் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை நுகர்வோருக்கு விற்பனை செய்யும் வகையில், சிறப்பு வணிக வளாகங்கள் அமைக்கப்படவுள்ளதாக அம்மாநில வேளாண் அமைச்சர் திரு. **Manikrao Kokate** தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் வேளாண் துறைக்கு சொந்தமான இடங்களில் இந்த வணிக வளாகங்கள் அமைக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதில், 50 சதவீத கடைகள் 30 முதல் 40 ஆண்டு குத்தகை அடிப்படையில், தனியார் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்படும் என்றும், எஞ்சிய 50 சதவீத கடைகள், விவசாய அமைப்புகள், சுயஉதவி குழுவினர், வேளாண் உற்பத்தியாளர் கூட்டமைப்பினருக்கு ஒதுக்கப்படும் என்று திரு. **Manikrao Kokate** தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள் யோகா பயிற்சியை ஆர்வத்துடன் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – அனுராதா 19 செகண்ட்ஸ்)

இந்தப் பயிற்சி தங்களது உடலுக்கு வலுசேர்ப்பதுடன் கல்வியில் சிறந்து விளங்கவும் உதவிகரமாக உள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 27 செகண்ட்ஸ்)

**>>>>>>><<<<<<<**

ஹிமாச்சலப்பிரதேசத்தின் மண்டி மாவட்டத்திற்கு உட்பட்ட **Patrighat - Sarkaghat** அருகே 200 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 25 பேர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் கனமழை பெய்து வரும் நிலையில், உள்ளூர் மக்கள் உதவியுடன் காவல்துறையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**>>>>>>><<<<<<<**

நாட்டிலேயே, மேகாலயா மாநிலத்தின் சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் மொத்த பட்ஜெட்டில், 8 சதவீத நிதி சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதாக அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில், 2023ஆம் ஆண்டு இது, சுமார் 6 மடங்கு அதிகரிக்கப்பட்டு, ஆயிரத்து 700 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்து.

**>>>>>>><<<<<<<**

19 வயதுக்குட்பட்டோருக்கான **Cava** வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா – கிர்கிஸ்தானை வென்றது.

>>>>>>><<<<<<<

**Poznan** ஓப்பன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

போலந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-2, 4-6, 6-4 என்ற செட்கணக்கில் போலந்தின் **Alan Wazny-**யை வென்றார்.

>>>>>>><<<<<<<

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டி இன்று தாய்லாந்தில் தொடங்கியது.

>>>>>>><<<<<<<